**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 28/2018

பெயர் – ராமசாமி (DW–1)

நாள் – 04.08.2025

**<u>9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–</u>**

1) என் உடன் பிறந்தவர்கள் 6 நபர்கள். 5 ஆண்கள், 2 பெண்கள் ஆவார். பெருமாள்ராஜ், ராமசாமி, பழனிச்சாமி, லட்சுமணப்பெருமாள் மகன் சீனிவாசன், நாராயணசாமி ஆகிய ஆண் பிள்ளைகள், சீனியம்மாள், சரஸ்வதி ஆகிய பெண்பிள்ளைகள். வழக்கு சொத்து அனைத்தும் எனது அப்பாவின் பெயருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது அப்பாவின் பெயரில் தான் பட்டாவும் உள்ளது.

2) தபசில் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எனது அப்பாவின் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் அது குறித்து எனக்கு நினைவில்லை. எனது அப்பா இறப்பதற்கு முன்பாக சொத்துக்கள் எதுவும் பாகப்பிரிவினை செய்து தரவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்த பின்பு சொத்துக்களை நாங்கள் அனைவரும் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தோம் என்றால் 5 ஆண் மகன்கள்மட்டும் அனுபவித்து வந்தோம், பெண்பிள்ளைகளுக்கு நகை, நட்டு போட்டு சொத்துக்கள் கொடுத்து ஒதுக்கி விட்டோம்.

3) பெண்பிள்ளைகளுக்கு நகை, நட்டு போட்டு சொத்துக்கள் கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் அனைத்து பிள்ளைகளும் கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல, ஆண்பிள்ளைகள் மட்டும்தான்அனுபவித்து வருகிறோம். எனது அண்ணன் பெருமாள்ராஜ் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 9 ம் பிரதிவாதி சீனியம்மாளுக்கு வழக்கு சொத்தில் 1/7 அளவு பங்குள்ளதென்றால் சரியல்ல, எனது அப்பா காலத்திலேயே நகை, சொத்துக்கள் கொடுத்து ஒதுக்கிவிட்டோம்.

4) தபசில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் வாதியின் பெயரில் பட்டாவானது மோசடியாக பெறப்பட்டுள்ளது என்றால் வாதியின் பெயரில் உள்ளதே தவிர மோசடியாக உள்ளதா என்பது குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பா நாராயணசாமிக்கு பாகப்பிரிவினை எதுவும் செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. என்னிடம்

காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை.

5) பொதுவாக எனது அப்பா கையெழுத்து எழுதிப்போடும் பழக்கம் உடையவர் என்றால் சரிதான், ஆனால் அவருக்கு வயதாகிவிட்டதால் கைநடுக்கம் ஏற்பட்டதால் கைரேகை வைக்கும் பழக்கம் இருந்தது.